ஓம் சரவணஜோதியே நமோ நம

**ஆசான் அரங்கமகா ஞானியரின் அருளாசி நூலிலிருந்து**
**பராபவ ஆண்டு சித்திரை திங்கள் முழுமதி நன்னாளாம்**
**சித்ரா பௌர்ணமி விழா குறித்தும்**
**ஓங்காரக்குடிலின் நிர்வாக செயல்பாடுகள்**
**தொண்டர் பெருமக்கட்கு உண்டான ஆசி குறித்தும்**
**அரங்கன் யான் அருளாசி வழங்குகிறேன்**
**ஆசான் அரங்கமகா ஞானியரின் அருளாசி விளக்க நூல்**

01.05.2026

1. ஆனந்த நடனமிட்ட ஈசன் பாதம்
அடிவணங்கி அரங்கன் யான் அருளாசி
ஞானமொடும் பராபவ ஆண்டு
சித்திரை திங்கள் முழுமதி நன்னாளில்

2. சித்ரா பௌர்ணமி பூஜை விழா
நிகழ்வாக இனிதே அரங்கன் யான்
அருளாசி தன்னை ஓங்காரக்குடிலின்
நிர்வாகத்திற்கும் தொண்டர் பெருமக்கட்கும்

3. வந்து கலந்து கொண்ட உலகோர்க்கும்
வரமாக ஆசிதனை அருள்வேன்
உயர்வுபட பராபவ ஆண்டு
சித்திரை பௌர்ணமி பூஜை விழா

4. ஞானியர்களெல்லாம் அரங்கன் என்னோடு
உடன் இருந்து ஞானபண்டிதனும்
தலைமையேற்று நடத்த விழா
மிகச்சிறப்பாக நடந்தேறியது

5. இவ்விழாவில் மக்களோடு மக்களாக
ஞானியர் படைகளும் சூட்சுமமாய்
வந்து செல்கின்றனர் அப்பா
அப்பனே விழாவில் நிர்வாகத்தின் ஏற்பாடும்

6. தொண்டர் பெருமக்களின் தொண்டும்
மகத்துவமிக்கது அருளமுதாக அமுதிலும்
அரங்கன் யான் சக்தியூட்டி
அருமருந்தாக அவரவர்க்கும்

7. அறுசுவை கூட்டி இனிதே
அற்புதம் நிகழ்த்தியுள்ளேன்

இவ்விழா அரங்கன் என்
அனுகூலத்தோடு நடந்துள்ளது

8. வந்த அன்பர்கட்கெல்லாம்
வரம் தந்துள்ளேன் உள்ளபடி
முழுமதி இந்த பூஜை விழாவில்
உயர்வாக வந்து கொண்டு

9. இனிதே வரம் வேண்டி நிற்பவர்க்கு
அவரவர்கள் வேண்டும் வரம்
அனைத்தும் சித்தியாகும்
இந்த விழாவில் தொண்டற்றிய

10. என் தொண்டர் பெருமக்களெல்லாம்
பூரண குணம் திடமோடு தேகபலம்
மனபலமோடு ஞானபலம் கூடி
அரங்கன் யான் தேடுகின்ற

11. ஞானியர் படைகளுள் ஒருவராக
அவரவரும் தேறி இனிதே
ஞானவாழ்வும் கடைத்தேற்றத்துக்கு
உண்டான பெருநிலையும் காண ஆசியுண்டு

12. என் உத்தரவின்படி இனிதே நிர்வகிக்கும்
நிர்வாகமும் மிகச்சிறப்புற செயல்பாடு கண்டுவர
எக்காலமும் ஓங்காரக்குடிலின் தர்மத்துக்கு
குறை வாரா வண்ணம் பொருளாதார பலமும்

13. மேலவரிடத்தில் வந்து செல்வாக்கும் உதவியும்
பொருளாதாரத்தில் சோடையில்லா வண்ணம்
எல்லா பாதுகாப்புக்கும் ஆசியுண்டு
உலகளாவிய வண்ணம் மலேசியா புவியிலிருந்தும்

14. சித்ரா பௌர்ணமி பூஜை விழாவிற்கு
வந்த அன்பர்கட்கு சர்வ பாதுகாப்பு
தந்து அரங்கன் காப்பேன்
என் கிளை சங்கங்களான மலேசியா புவியிலும்

15. எல்லா காரியங்கட்கும் சர்வ பாதுகாப்பு உண்டு
இந்த பூஜை கலந்து கொண்டதன் மூலம்
மலேசியா புவியிலும் மற்ற சமூகத்தாராலோ
அரசாங்கத்தாலோ எந்த குறுக்கீடும் வாரா வண்ணம்

16. சர்வ பாதுகாப்பிற்கும் முடையான நிதிகளெல்லாம்
கைக்கு வந்து இனிதே அரங்கன் தர்மம் வளர்க்கவும்
அன்னதான சேவைக்கு எக்காலமும்
குறை வாரா வண்ணம் பாதுகாப்பு தந்து காப்பேன்

17. அச்சமற நிர்வாகம் செய்கின்ற
அனைத்து செயல்களுக்கும்
அரங்கன் யான் துணை நிற்பதாலே
எல்லா காரியங்களும் வெற்றியாகும்

18. இதனொடு இந்த பராபவ ஆண்டு
இனி வருகின்ற ஒவ்வொரு முழுமதியிலும்
அரங்கன் என் தர்மம்
இன்னும் எண்ணிக்கை கூடும்

19. இன்னும் மக்கள் படை பெருக
இன்னும் பல கிராமங்கள் இணைய
கிராம அன்னதானங்களும் வளர்ந்து
தர்மத்துக்கு குறைபடா வண்ணம்

20. தர்மத்தின் வழி உலகோரெல்லாம்
ஒன்றிணைந்து அனைவரும் தர்மவான்களாக
ஞானவான்களாக சிறக்க அரங்கன் என்
பரிபூரண ஆசி உண்டு இவ்விழாவில்

21. அனைத்து அன்பர்களுக்கும்
சர்வ பாதுகாப்பு தந்து
அரங்கன் யான் துணை நிற்கின்றேன்
வந்து செல்பவர்க்கும் உள் பணி ஆற்றுபவர்க்கும்

22. வெளியில் வசூல்பணி புரிபவர்க்கும் என
அனைவருக்கும் அரங்கன் என்
பாதுகாப்பு பரிபூரணமாய் உண்டு உண்டு
இவ்விழா அரங்கன் மகிழவே

23. சுப்பிரமணியர் மகிழவே இனிதே
சிறப்பாக நடந்துள்ளது இவ்விழாவில்
எல்லா ஞானியர்களும் மெய்சிலிர்த்து இனிதே
கலியுகத்தில் இப்படி ஒரு தர்மசபையா

24. ஞானசபையா என அவரவர்கள்
மகிழ்ந்து ஆசி வரம் தர

அன்னதனால் என் தொண்டர்
பெருமக்கட்கும் நிர்வாகிகட்கும்

25. பொருளாதாரத்தில் தர்மத்தில் பொருளுதவி செய்து
வரம் கேட்டு வந்தவர்கள் அவரவர்களுக்கும்
இனிதே அரங்கன் என் பரிபூரண ஆசியும்
பாதுகாப்பும் உண்டு உண்டு ஆசி விளக்கம் முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி